தினமணி

## ஈரோட்டில் ஆகஸ்ட் 25ல் மஞ்சள் விவசாயிகள் மாநாடு

First Published : 16 Aug 2012 02:11:17 PM IST

**ஈரோடு, ஆக., 16 : ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் விவசாயிகள் மாநாடு ஆகஸ்ட் 25ம் தேதி நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் மத்திய உணவுத் துறை அமைச்சர் சரத் பவார் கலந்து கொண்டு உரையாற்றுகிறார். பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மஞ்சள விவசாயிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர்.**

---

## விவசாயிகளுக்கும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்: ஜெயலலிதா

First Published : 17 Aug 2012 03:38:37 AM IST



சென்னை, ஆக. 16: முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்படி, ஒரு குடும்பத்துக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வீதம் 4 ஆண்டுகளுக்கு ரூ.4 லட்சம் வரையிலும், சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு ரூ.1.5 லட்சம் வரையிலும் காப்பீடு வழங்கப்படுகிறது. விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் நலனில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் காப்பீட்டுத் திட்டத்தை விரிவுபடுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

ராயப்பேட்டை மருத்துவமனைக்கு ரூ.9.93 கோடி ஒதுக்கீடு: புற்றுநோயால் அவதிப்படும் ஏழைகளுக்கு தரமான மருத்துவ சேவை அளிக்கப்பட வேண்டியது அவசியம். இதைக் கருத்தில் கொண்டு இப்போது தஞ்சாவூர், கோவை, திருநெல்வேயில் உள்ள அரசு மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் கோபால்ட் கதிரியக்க சிகிச்சைக் கருவிகளின் திறனை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கருவியில் உள்ள உள்ளீடுகளை மாற்றி புதியனவற்றை பொருத்த ரூ.2.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் 1978-ம் ஆண்டு புற்றுநோய் பிரிவு தொடங்கப்பட்டது. இந்த சிகிச்சை பிரிவைப் புற்றுநோய் உயர் சிகிச்சை மையமாக தரம் உயர்த்த ரூ.17 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டப்பட்டு முடியும் நிலையில் உள்ளது.

இந்த புற்றுநோய் உயர் சிகிச்சை மையத்துக்கு புதிய இயந்திரங்கள், மருத்துவக் கருவிகள், துணி வகைகள், கம்ப்யூட்டர்கள் வாங்குவதற்கு ரூ.6 கோடியே 40 லட்சத்து 6 ஆயிரமும், இந்த மையத்தில் பணிபுரிய 83 புதிய மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியிடங்களை உருவாக்குவதற்கு ரூ.3 கோடியே 53 லட்சத்து 19 ஆயிரம் என மொத்தம் ரூ.9.93 கோடி ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

---

## பவானிசாகர் நீர்மட்டம் 37.98 அடி

First Published : 17 Aug 2012 10:28:53 AM IST

ஈரோடு, ஆக.16: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 37.98 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 304 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,350 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. கால்வாயில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.14 டி.எம்.சி.

---

**பதிவு செய்த நாள்** : **ஆகஸ்ட்** 16,2012,02:49 IST

# திராட்சை விலை கிலோ ரூ.300

மதுரை: மதுரையில் வெளிநாட்டு பழங்களின் விலை கிலோ ரூ.300ஐ தொட்டது.
யானைக்கல் பழ வியாபாரி செந்தில் கூறியதாவது:
நேற்று, முதல் தரமான ஆஸி., திராட்சை ரூ.300, ஆஸி., ஆரஞ்சு ரூ.110, சீனா ஆப்பிள் ரூ.200க்கு விற்கப்பட்டது. இந்தியன் ராயல்கலா ஆப்பிள் ரூ.160 - ரூ.200, ராயல் கலா ஆப்பிள் ரூ.230, காபூல் மாதுளை ரூ.150, சீட்லெஸ் மாதுளை ரூ.130, சாத்துக்குடி ரூ.40, மங்குஸ்தான் ரூ.350, பன்னீர் திராட்சை ரூ.50, தில்குஷ் திராட்சை ரூ.70, அன்னாசி ரூ.30, தர்பூசணி ரூ.30, கொடை ஆரஞ்சு ரூ.90, கிவிப்பழம் ஒன்று ரூ.30, லிச்சிப்பழம் கிலோ ரூ.230க்கு விற்கப்பட்டது, என்றார்.

இரு நாள் மழைக்கு காய்கறி விலை "விர்...'

மதுரை: மதுரையில் இரு நாட்களாக பெய்த மழையால், மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில், சில காய்கறிகளின் விலை கிலோவிற்கு ரூ.3 வரை உயர்ந்தது.
வியாபாரிகள் சங்கத் தலைவர் பி.எஸ். முருகன் கூறியதாவது:
நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.8, கத்தரி 15, பூசணி 7, காலிபிளவர் 10, முட்டைகோஸ் 9, வெண்டை 14, புடலை 10, சுரை 7, அவரை 20, உருளைகிழங்கு 22, சேனைகிழங்கு 25, கருணைகிழங்கு 22, வெங்காயம் 10, சிறியது 8, பாகற்காய் 15, சிறியது 40, இஞ்சி 55, நூக்கல் 15, பட்டாணி 70, பீன்ஸ் 45, பட்டர் பீன்ஸ் 55, சோயா பீன்ஸ் 40, சவ்சவ் 18, கேரட் 30, பீட்ரூட் 15, கீரை வகைகள் 10, புதினா 15, கொத்தமல்லி 15, கறிவேப்பிலை 10, முருங்கை 7 ரூபாய்க்கு விற்கப் பட்டது.
பத்து ரூபாய்க்கு கீழ், காய்கறிகளை வியாபாரிகள் கொள்முதல் செய்தால் கட்டுப்படியாகாது என விவசாயிகள் கருதுகின்றனர். இதன் காரணமாகவும், மழையால் வரத்து குறைந்ததாலும் காய்கறி விலை உயர்ந்துள்ளது, என்றார்.

---

## ஆனைமலை பகுதியில் தக்காளி உற்பத்தி குறைந்தது

**பதிவு செய்த நாள்** : **ஆகஸ்ட்** 17,2012,00:15 IST

ஆனைமலை : பருவ மழை பொய்த்ததால் இந்த ஆண்டு ஆனைமலை பகுதியில் தக்காளி உற்பத்தி குறைந்தது. ஆனைமலை சுற்றியுள்ள திவான்சாபுதூர், மீனாட்சிபுரம், களத்துபுதூர், கோவிந்தாபுரம், பெரியபோது, தாத்தூர், சேத்துமடை, ஒடையகுளம், மாரப்பகவுண்டன்புதூர், மூலக்கடை, செராம்பி, நெடும்பாறை, முத்துசாமிபுதூர், மணக்கடவு, சின்னசெராம்பி போன்ற பகுதிகளில் தக்காளி உற்பத்தி கடந்தாண்டு ஓரளவு இருந்தது. இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாயிகள் தக்காளி உற்பத்தி செய்வது நின்றுவிட்டது. ஆனைமலை அடுத்துள்ள அடுத்துள்ள மீனாட்சிபுரம் ரயில்வே கேட் அருகில் செயல்படும் காய்கறி கமிசன் மண்டிகளுக்கு தக்காளி வரத்து குறைந்துவிட்டது. மற்ற காய்கறி வரத்தும் குறைந்துள்ளது.வாழைக்காய் வரத்தும் மிகவும் குறைந்துள்ளது. நேற்று நடந்த ஏலத்தில் நேந்திரன் வாழைக்காய் ஒரு கிலோ 30 ரூபாய்க்கும், கரூர் பூவன் ஒரு கிலோ 16 ரூபாய்க்கும், பச்சை கதளி ஒரு கிலோ 33 ரூபாய்க்கும், சாம்பிராணி பூவன் ஒரு கிலோ 13 ரூபாய்க்கும் விற்பனையானது. வெண்டைக்காய் ஒரு கிலோ 11 ரூபாய்க்கும், வெள்ளை தட்டை பயிறு ஒரு கிலோ 11 ரூபாயக்கும், சிவப்பு தட்டை பயிறு ஒரு கிலோ 15 ரூபாய்க்கும், பச்சை தட்டை பயிறு ஒரு கிலோ 15 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் ஒரு கிலோ 15 ரூபாய்க்கும், முருங்கைக்காய் 15 ரூபாய்க்கும் விற்பனையானது.

---

## மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் 7 முதுநிலை பாடத்திட்டம் அறிமுகம்

**பதிவு செய்த நாள்** : **ஆகஸ்ட்** 17,2012,00:31 IST

மேட்டுப்பாளையம் : மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், புதிய முதுநிலை பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
எம்.பி.ஏ., வனவியல் வணிக மேலாண்மை, எம்.எஸ்சி.,(வன வளங்கள் மேலாண்மை, மரப்பெருக்கம் மற்றும் உயிரித் தொழில்நுட்பம், மரவளர்ப்பு மற்றும் வேளாண் காடுகள், சுற்றுச்சூழல் இயல், மர அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் வன விலங்குகள் மேலாண்மை) ஆகிய ஏழு, புதிய முதுநிலை பாடத்திட்டங்கள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
கல்லூரி முதல்வர் துரைராசு பேசுகையில்,""கல்லூரியில், அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்படிப்புகள், இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத அளவில், தனித்துவம் வாய்ந்ததாகும். குறிப்பாக, வனவியல் வணிகமேலாண்மை, வனவளங்கள் மேலாண்மை மற்றும் மர அறிவியல் தொழில்நுட்பம் ஆகிய பாடத்திட்டங்கள், இங்கு மட்டுமே உள்ளன. இந்த பாடத்திட்டங்களுக்கு, தேசிய மற்றும் உலகளவில் அதிகளவில் வேலைவாய்ப்பு இருக்கும்," என்றார்.
புதிய பாடத்திட்டங்களை துவக்கி வைத்து, கோவை, மத்திய வன அலுவலர் பயிற்சி நிறுவன முதல்வர் ஜோஸ் டி மேத்யூ பேசுகையில்,""வேளாண் படிப்புக்கு அடுத்ததாக துவக்கப்பட்ட, வனவியல் படிப்பு, வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. வனவியல் மாணவ, மாணவியர் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். மரத்தின் தேவைக்கேற்ப மரங்களை, உற்பத்தி செய்வது அவசியம். இத்துறையில் பயில்வோர், வனம் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். ஆராய்ச்சியை அதிகரித்தால்தான், மரங்களை உற்பத்தி செய்ய முடியும்," என்றார்.
மாவட்ட வன அலுவலர் திருநாவுக்கரசு, மேட்டுப்பாளையம் வனக் கல்லூரி பேராசிரியர்கள்
சிவா, சேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

---

## தக்காளி சாகுபடி: தோட்டக்கலைத்துறை அறிவுரை

**பதிவு செய்த நாள்** : **ஆகஸ்ட்** 17,2012,00:42 IST

உடுமலை : "தக்காளி சாகுபடியில் காய்ப்புழு தாக்குதலை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகளை தவிர்த்து இனக்கவர்ச்சி பொறி, வேப்பெண்ணெய் தெளித்தல் ஆகிய பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்றலாம்', என தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.
உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் கிணற்றுப்பாசனத்திற்கு தக்காளி பயிரிடப்படுகிறது. தற்போது, சாகுபடியில் பரவலாக காய்ப்புழு தாக்குதல் காணப்படுகிறது. இத்தாக்குதலால் சாகுபடியில் விளைச்சல் பாதிக்கப்பட்டு வருகிறது.
இப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தோட்டக்கலைத்துறையினர் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அத்துறையினர் கூறுகையில், " தக்காளி சாகுபடியில் காய்ப்புழுக்கள் அதிகளவு சேதம் ஏற்படுத்துகின்றன. தாய் பூச்சி நுனிக்குருத்து பகுதியில் 300 முதல் 700 வரையிலான ஒற்றை முட்டைகளை இடுகிறது.
செடியின் நடுக்குருத்து பகுதியில் ஊதா நிற பந்து போல முட்டைகள் காணப்படும். ஒரு பகுதி உடலை வெளியில் நீட்டியபடி தக்காளியின் உட்பகுதியை காய்ப்புழுக்கள் சுரண்டி பதம் பார்க்கும். இப்புழு தனது கழிவுகளை பழத்திலேயே இடுவதால் பழத்தின் தன்மையும் கெடுகிறது.
ஒரு லிட்டர் தண்ணீருக்கு வேப்பம்புண்ணாக்கு கரைசல் 10 சதவீதம் தெளித்தால் புழுக்களை அழிக்கலாம். வேப்பம் இலை சாறு, கொட்டை சாறு மற்றும் வேப்பெண்ணெய் பயன்படுத்தியும் பயிர்பாதுகாப்பு செய்யலாம்.
பழுத்து கீழே விழுந்த பழங்களில் கருப்பு நிற திட்டுகளுடன் ஓட்டைகளுடன் இளம்பருவ புழுக்கள் காணப்படும். தக்காளி பிஞ்சில் சேதம் காணப்படும் போதே புழுக்களை பிடித்து நசுக்கி அழிக்கலாம். பாதிக்கப்பட்ட காய்களை தனியாக பிரித்து கால்நடைகளுக்கு உணவாக அளிக்கலாம்.
புழுக்களை கட்டுப்படுத்த ஒரு எக்டருக்கு 15 முதல் 20 இடங்களில் பறவை தாங்கிகள் அல்லது இருக்கைகள் அமைக்க வேண்டும். இனக்கவர்ச்சி பொறி ஒரு எக்டருக்கு 10 என்ற எண்ணிக்கையில் வைத்து கண்காணிக்க வேண்டும். நவீன சோலார் விளக்கு பொறிகளையும் விவசாயிகள் வாங்கி பயன்படுத்தலாம்.
இவ்வாறு தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

## ஆந்திர மாதுளை விற்பனை ஜோர்

**பதிவு செய்த நாள்** : **ஆகஸ்ட்** 15,2012,21:10 IST

விருத்தாசலம்: விருத்தாசலத்தில் மலிவு விலையில் விற்ற, ஆந்திர மாதுளை பழங்களை பொது மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர்.
விருத்தாசலம் பகுதிகளில் விலையை கேட்டாலே அதனை சாப்பிடும் எண்ணம் போய்விடும் அளவிற்கு மாதுளை பழம் கிலோ 120 ரூபாய்க்கும், ஆப்பிள் 200 ரூபாய்க்கும் விற்றன.
கடந்த ஒரு வாரமாக ஆந்திர மாநில மாதுளை பழங்கள் விருத்தாசலம் பகுதியில் அமோகமாக விற்பனையாகி வருகின்றன. சிறு வியாபாரிகள் மாதுளை பழங்களை வாங்கி தள்ளு வண்டிகளில் வைத்து கிலோ 60 ரூபாய்க்கு விற்று வருகின்றனர். விலை மலிவாக உள்ளதால் பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

---

# உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கும், மருத்துவ காப்பீட்டு திட்டம் விரிவாக்கம்

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஆக.17–
விவசாய தொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு முதல்–அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தை, உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் விரிவுபடுத்த முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.
இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–
மருத்துவ காப்பீட்டு திட்டம்
“உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்” என்ற கவிமணியின் கூற்றிற்கேற்ப உடலை உறுதியாக்கி நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை அனைவரும் பெறும் வகையிலும், ஏழை, எளிய, நலிந்த மக்கள் பயன்பெறும் வகையிலும் முதல்–அமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டம் என்ற ஒரு புதிய காப்பீட்டு திட்டத்தை கடந்த ஜனவரி 11–ந்தேதி முதல்–அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார்.
இத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்திற்கு வருடத்திற்கு ரூ.1 லட்சம் வீதம் 4 வருடங்களுக்கு ரூ.4 லட்சம் வரையிலும், சில குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு ரூ.1½ லட்சம் வரையிலும் காப்பீடு வழங்கப்படுகிறது.
உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர்களுக்கு விரிவாக்கம்
விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதல்–அமைச்சர் ஜெயலலிதா, முதல்–அமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும் இந்த திட்டத்தினை விரிவுபடுத்த ஆணையிட்டுள்ளார்.
இதன் மூலம் விவசாய பெருமக்கள் அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி கிடைக்கவும், அவர்கள் நோயற்ற வாழ்வு வாழ்ந்து, உற்சாகமாக பணியாற்றவும் வழிவகை ஏற்படும்.
புற்றுநோய் உயர் சிகிச்சை மையம்
புற்றுநோயினால் அவதியுறும் ஏழை, எளிய மக்களுக்கு தரமான மருத்துவ சேவை அளிக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்பதை கருத்தில் கொண்டு தற்போது தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலியிலுள்ள அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும் கோபால்ட் கருவிகளின் திறனை அதிகரிக்கும் வகையில், அக்கருவியில் உள்ள உள்ளீடுகளை மாற்றி புதியவற்றை பொருத்த ரூ.2 கோடியே 61 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார்.
சென்னை ராயப்பேட்டை மருத்துவமனையில் 1978–ம் ஆண்டு புற்றுநோய் பிரிவு தொடங்கப்பட்டது. இந்தப் பிரிவில் புற்றுநோய்க்கான உயர்தர சிகிச்சை பலதரப்பட்ட மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த புற்றுநோய் சிகிச்சை துறையினை புற்றுநோய் உயர் சிகிச்சை மையமாக தரம் உயர்த்த ரூ.17 கோடி செலவில் புதிய கட்டிடம் கட்டப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.
ஏழைகளுக்கு தரமான சிகிச்சை
இந்த புற்றுநோய் உயர் சிகிச்சை மையத்துக்கு புதிய இயந்திரங்கள், மருத்துவக்கருவிகள், மரச்சாமான்கள், துணிவகைகள் மற்றும் கணினிகள் வாங்குவதற்கு ரூ.6 கோடியே 40 லட்சத்து 6 ஆயிரத்து 50 மற்றும் இந்த மையத்தில்

பணிபுரிவதற்காக 83 புதிய மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பணியிடங்களை உருவாக்குவதற்கு ரூ.3 கோடியே 53 லட்சத்து 19 ஆயிரத்து 600 என மொத்தம் ரூ.9 கோடியே 93 லட்சத்து 25 ஆயிரத்து 650 நிதி ஒதுக்கீடு செய்து முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம் புற்றுநோயினால் பாதிக்கப்படும் ஏழை, எளிய மக்களுக்கு தரமான சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டு உள்ளது.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## சிறுவாணியின் குறுக்கே தடுப்பு அணை கட்ட அனுமதி:

## கேரள அரசுக்கு கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் கண்டனம்

சென்னை, ஆக.17–
சிறுவாணியின் குறுக்கே தடுப்பு அணை கட்டுவதற்கு கேரள அரசு அனுமதி அளித்திருப்பதற்கு கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்து கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் செ.நல்லசாமி நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–
சிறுவாணியின் குறுக்கேதடுப்பணை
பவானியின் கிளை நதியான சிறுவாணியின் குறுக்கே 450 மீட்டர் நீளத்தில் தடுப்பணை கட்டுவதற்கு கேரள அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கிறது. இதன் திட்ட மதிப்பீடு ரூ.400 கோடி. இதில், 4.5 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். இதன்மூலம் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.
இந்த திட்டம் சுற்றுப்புறச் சூழலுக்கு ஆபத்தானது என்று பல்வேறு அமைப்புகள் எச்சரித்து வருகின்றன. தமிழ்நாடு அரசும் இதற்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஆனால், கேரள அரசு எதையும் பொருட்படுத்தவில்லை. கேரள அரசின் இந்தப் போக்கினை கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.
மழை மறைவு மாநிலம்
கேரளம் ஒரு மழை மாநிலம். சராசரி மழை 3 ஆயிரம் மில்லி மீட்டர் ஆகும். மழைநீரைத் தேக்கி வைப்பதற்கும், பயன்படுத்துவதற்குமான வாய்ப்பு மிகக்குறைவு. ஆண்டுதோறும் சுமார் 2 ஆயிரம் டி.எம்.சி. தண்ணீர் வீணாக கடலில் போய் கலக்கிறது.
தமிழ்நாடு ஒரு மழை மறைவு மாநிலம். இதன் சராசரி மழைப்பொழிவு 940 மில்லி மீட்டர்தான். மழைநீரைத் தேக்கி வைப்பதற்கும், பயன்படுத்துவதற்குமான வசதி வாய்ப்புகள் நிறைய உள்ளன. ஆனால், மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து வரும் நீரின் அளவோ குறைவு, பவானி, அமராவதி ஆகிய ஆறுகள் தமிழகத்திற்கு வளம் சேர்ப்பவை ஆகும்.
அட்டப்பாடி அணைத்திட்டம்
அட்டப்பாடி அணைத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் மற்றும் பாசன நீர் பறிபோகும். இந்தப் பகுதி பாலைவனமாகிவிடும். இந்த ஆறுகளின் குறுக்கே கேரள அரசு அணை கட்ட முற்படுவது ஈவு, இரக்கம் இல்லாத மனிதாபிமானமற்ற செயலாகும்.
நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் காக்கும் கடமை உள்ள மத்திய அரசு உடனடியாக இந்த விஷயத்தில் தலையிட்டு, தடுப்பு அணை கட்டும் முயற்சியைத் தடுக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் 1990–ம் ஆண்டு ரஷ்யாவுக்கு வந்த சோதனைதான் இந்தியாவுக்கும் வரும்.
இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

---